## <u>கம்பம் நகராட்சி</u>

**2018–ஆம் ஆண்டு நவம்பர் மாதம் (30.11.2018) ஆம் நாள் வெள்ளி கிழமை பிற்பகல் 04.00** மணிக்கு, கம்பம் நகர்மன்றக் கூட்ட அரங்கில் தனிஅலுவலர் தலைமையில் நடைபெறும் சாதாரணக் கூட்டம்.

### <u>கூட்டப் பொருட்கள்</u>

| | |
|---|---|
| **1.** 1631 | நகராட்சி ஆணையாளர் அவர்களின் 11/2018–ஆம் மாதத்திற்குரிய நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது |
| | **அலுவலகக் குறிப்பு:** மன்றம் பதிவு செய்யலாம். |
| **2.** | நகராட்சி பொறியாளர் அவர்களின் 11/2018–ஆம் மாதத்திற்குரிய நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது. |
| | **அலுவலகக் குறிப்பு:** மன்றம் பதிவு செய்யலாம். |
| **3.** | இந்நகராட்சிக்குட்பட்ட 1 முதல் 33 வரையுள்ள வார்டுகளில் 33 இடங்களில் பெறுநிறுவன சமூக பொறுப்புணர்வு நிதி (CSR Fund) / தனியார் மூலமாக சமூக நல சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் நிலையம் அமைத்திட விருப்பம் தெரிவித்தல் தொடர்பான விளம்பர அறிவிப்பினை தேனி, செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் வெளியீட்டு ஆணை எண். 984/ஒப்பந்தபுள்ளி/விளம்பரம்/2018, நாள்.08.10.2018 வழியாக இந்தியன் எக்ஸ்பிரஸ் ஆங்கில நாளிதழில் விளம்பரம் செய்த வகையில் பட்டியல் தொகை ரூ.49,140/–ஐ (ரூபாய் நாற்பத்து ஒன்பதாயிரத்து நூற்று நாற்பது மட்டும்) பிரைட் அட்வர்டைசிங் , சென்னை நிறுவனத்திற்கு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. |
| | **அலுவலகக் குறிப்பு:** மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண். 3925/2018/இ1) |
| **4.** | கம்பம் நகராட்சி பெருநிறுவன சமூக பொறுப்புணர்வு நிதி (CSR Fund) தனியார் மூலமாக நகராட்சிக்குட்பட்ட **33** வார்டுகளில் சமூக நல சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் நிலையம் அமைக்கம் பணிக்கு **30.10.2018** அன்று வரப்பெற்ற ஒரு ஒப்பந்தப்புள்ளியின் தொழில்நுட்ப உறை திறக்கப்பட்டு தொழில்நுட்ப தகுதிகள் கூர்ந்தாய்வு செய்யப்பட்டு தகுதியுடைய M/s. Dharana Infrastructure Projects Pvt Ltd., Chennai. நிறுவனத்தின் விலை விபர உறை **09.11.2018** அன்று திறக்கப்பட்டதில் கீழ்கண்டவாறு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளி மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது. |

| Sl. No. | Name of the Contractor | Rate to be remitted to the Theni – Allinagaram Municipality (Rupees per 20 Ltr.) | Rate to be charged for sale to public (Rupees per 20 Ltr.) | Rate be charged for sale to public (Rupees per 1 Ltr from chilling machine) |
|---|---|---|---|---|
| 1 | M/s. Dharana Infrastructure Projects Pvt Ltd., Chennai. | 1) Rs:1.00 / 20 liters sold at Plant Site (Rupees One only) | Rs: 6.90/- at Plant Site (Rupees Six and paise ninety only) | Rs.1.00 (Rupees One only) from Vending machine (chilled or non chilled) |

| | |
|---|---|
| | **அலுவலகக்குறிப்பு:** அ) மன்றம் அனுமதிக்கலாம்.<br>ஆ) மேற்கண்ட பணியினை பெருநிறுவன சமூக பொறுப்புணர்வு நிதி (CSR Fund) / தனியார் மூலமாக மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.<br>இ) மேற்கண்ட பணிக்கு ஒரு ஒப்பந்தப்புள்ளி வரப்பெற்று இருப்பினும், பொதுமக்களுக்கு சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் வழங்க வேண்டியதை கருத்தில் கொண்டு, பணியின் அவசர அவசியம் கருதியும், மறு ஒப்பந்தப்புள்ளி கோருவதனால் ஏற்படும் காலதாமத்தினை தவிர்த்திடும் பொருட்டும், ஒப்பந்தப்புள்ளி ஆவணத்தில் குறிப்பிட்ட விலையினை விட **1.43** % குறைவாக கொடுத்துள்ளதாலும் மேற்கண்ட பணிக்கு M/s. Dharana Infrastructure Projects Pvt Ltd., Chennai நிறுவனம் தொழில்நுட்ப ரீதியாக தகுதி உடையதாக உள்ளதாலும் மேற்கண்ட நிறுவனத்தின் விருப்பம் கோரும் ஒப்பந்தத்தின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்க மன்றம் அனுமதிக்கலாம்.<br>ஈ) மேற்கண்ட பணியின் அவசர அவசியம் கருதி மன்றத்தின் முன்அனுமதி பெற்று வேலைஉத்திரவு வழங்கியதற்கும் மன்றம் அனுமதிக்கலாம். |
| **5.** | இந்நகராட்சியில் உள்ள 33 வார்டுகளில் உள்ள பொது மக்களுக்கு தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய கூட்டு குடிநீர் திட்டம் மற்றும் உள்ளூர் சுருளிப்பட்டி குடிநீர் திட்டத்தின் கீழ் 6.10 மில்லியன் லிட்டர் வீதம் நபர் ஒன்றுக்கு நாள் ஒன்றுக்கு 90 லிட்டர் வீதம் இரண்டு தினங்களுக்கு ஒரு முறை குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. கம்பம் உள்ளூர் திட்டத்தின் கீழ் சுருளிப்பட்டி நீர் உந்து நிலையத்தில் நிறுவப்பட்ட மின் மோட்டார்களின் மின் இணைப்பிற்கு, கிராமப்பகுதியிலிருந்து மின்சாரம் சப்ளை ஆவதால் தொடர்ந்து தினசரி பலமணி நேரம் மின் தடை எற்படுவதுடன், இருமுனை மின்சாரம் மற்றும் மும்முனை மின்சாரம் என மாறி மாறி சப்ளை ஆவதால், மும்முனை மின் விநியோகம் ஆகும் நேரத்தில் மட்டுமே மோட்டார்களை இயக்க வேண்டிய நிலை உள்ளதால், தினசரி பல மணி நேரம் குடிநீர் நீரேற்றம் செய்ய இயலாமல் பொதுமக்களுக்கு சீரான குடிநீர் வழங்குவதில் மிகுந்த சிரமம் ஏற்படுகிறது. மேலும், ஒவ்வொரு நாளும் பல முறை மின் தடை ஏற்படுவதால், அங்குள்ள வால்வுகள் மோட்டார்கள் அடிக்கடி பழுதாகிறது.<br>எனவே, மேற்படி சுருளிப்பட்டி பம்பிங் ஸ்டேசனுக்கு தடையில்லா 24 மணி நேர மும்முனை மின் இணைப்பு வழங்க கோரி, மின் வாரியத்தில் 09.07.2018 அன்று விண்ணப்பம் பதிவு செய்யப்பட்டதில், சுருளிப்பட்டி மின்வாரிய உதவி பொறியாளர் அவர்களின் 13.11.2018ம் தேதிய 239—ம் எண் கடிதத்தில், 24 மணி நேர தடையில்லா மும்முனை மின் இணைப்பிற்கு ரூ. 21,54,920/— செலுத்துமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே, பொதுமக்களின் அத்தியாவசிய தேவையான குடிநீர் தேவையை கருத்திற்கொண்டு மேற்படி தொகையினை மின் வாரியத்திற்கு செலுத்த மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. |
| | **அலுவலக குறிப்பு:** அனுமதிக்கலாம். **(ந.க.எண்.** 1003/2016/இ2**)** |

**6.** சென்னை, நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் கடிதம் ந.க.எண். 27061/2015/ யு.பி.ஏ–2, நாள். 01.07.2016– மற்றும் ந.க.எண். 38038/2013/யுபிஏ2, நாள். 03.01.2017ல் தேசிய நகர்புற வாழ்வாதார இயக்கத்தின் கீழ் நகராட்சிகளில் உள்ள அரசு மருத்துவமனைகளில் அனுமதிக்கப்படும் உள்நோயாளிகளின் பாதுகாவலர் மருத்துவ மனையில் தங்குவதற்கு ரூ. 90.00 இலட்சம் மதிப்பீட்டில் பணிகள் மேற்கொள்ள 30.11.2016ம் தேதிய மாநில திட்ட குழு கூட்டத்தில் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இப்பணிக்கு சென்னை, தலைமைப் பொறியாளர் அவர்களின் செயல்முறைகள் ந.க.எண். 2829/2016/டிஓ2, நாள். 20.03.2017ன் படி தொழில்நுட்ப அனுமதி எண். 267/2016–17 பெறப்பட்டு பணிகள் செய்து முடிக்கப்பட்டது.

இப்பணிக்கு இந்நகர்மன்ற தீர்மான எண். 1082, நாள். 30.08.2016 ன்படி கம்பம் அரசு மருத்துவமனை உள்ள அரசு மருத்துவமனைகளில் அனுமதிக்கப்படும் உள்நோயாளிகளின் பாதுகாவலர் மருத்துவ மனையில் தங்குவதற்கு அரசு சாரா நிறுவனம் மதுரை மாவட்ட ஹரிஜன சேவக சங்கம், கம்பம் மூலம் கட்டிட இயக்குநதல் மற்றும் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதியளிக்கப்பட்டு, இந்நிறுவனத்துடன் நகராட்சி தனி அலுவலர்மற்றும் ஆணையர் அவர்களின் தலைமையில் 14.11.2018 அன்று கலந்தாய்வு கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்ட நடவடிக்கைகள் விபரம் மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

**<u>கூட்ட நடவடிக்கைகள்</u>**

| | |
|---|---|
| 1. | அரசு மருத்துவமனைகளில் அனுமதிக்கப்படும் உள்நோயாளிகளின் பாதுகாவலர் மருத்துவ மனையில் தங்குவதற்கு இடவசதி ஏற்படுத்தப்பட்டுள்ளதை சுத்தமாகவும், சுகாதாரமாகவும் வைத்துக்கொள்ள அறிவுறுத்தப்படுகிறது. |
| 2. | தேசிய நகர்புற வாழ்வாதார இயக்கத்தின் கீழ் அரசு மான்யம் பெறப்படும் வரை மேற்படி உறைவிடம் இயங்குவதற்கு தேவையான குடிநீர் மற்றும் மின் கட்டணம் ஆகியவற்றிற்கு நகராட்சியிலிருந்து செலுத்தப்படவேண்டும். அரசு மான்யம் பெறப்பட்ட பின்பு மேற்படி செலவினங்களுக்காக நகராட்சியிலிருந்து செலுத்தப்படும் தொகை நிறுத்தப்பட்டு அந்த தொண்டு நிறுவனம் மான்ய உதவி தொகையிலிருந்து மேற்படி செலவினங்களை மேற்கொள்ளவேண்டும். |
| 3. | தொண்டு நிறுவனத்தால் கீழ்கண்ட பதிவேடுகள் பராமரிக்கப்படவேண்டும்.<br>1) சொத்து விபர பதிவேடு (அசையும் மற்றும் அசையா சொத்துக்கள் விபரம்)<br>2) கணக்கு பதிவேடு ( தினசரி வரவு செலவு கணக்கு பராமரித்தல்)<br>3) வருகை பதிவேடு<br>4) நியமன குழு கலந்தாய்வு கூட்ட பதிவேடு<br>5) தன்பதிவேடு மற்றும் ஊதிய பதிவேடு<br>6) பராமரிப்பு பதிவேடு<br>7) புகார் பதிவேடு<br>8) பார்வையாளர் பதிவேடு |
| 4. | தொண்டுநிறுவனம் உறைவிடத்தினை இயக்குவதற்கு கீழ்கண்ட பணியாளர்களை நியமனம் செய்யவேண்டும்.<br>1) முழு நேர மேலாளர் – ஒரு நபர் ( பிரதி மாதம் ரூ. 15,000/– ஊதியம்)<br>2) பாதுகாவலர்களின் உதவியாளர்கள் – இரண்டு நபர்கள் (பிரதி மாதம் ரூ. 10,000/– ஊதியம்)<br>3) துப்புரவு பணியாளர்கள் ( தொண்டு நிறுவனத்தின் தேவைக்கேற்ப) (மொத்தமாக மாத செலவினம் ரூ. 15,000/–) |

| | |
|---|---|
| 5. | தொண்டு நிறுவனத்தினரால் அமர்த்தப்படும் பணியாளர்களுக்கு போதிய பயிற்சி அளித்து திறம்பட பணியாற்ற வைப்பது தொண்டுநிறுவனத்தின் பொறுப்பாகும். |
| 6. | நோயாளிகளின் பாதுகாவலர்களுக்கு அவசர உதவி தேவைப்பட்டால் அதுசமயம் பணியில் இருக்கும் உதவியாளர்கள் தொண்டுநிறுவனத்தின் மூலம் அருகில் உள்ள மருத்துவமனைக்கு செல்ல ஏற்பாடு செய்யவேண்டும். |
| 7. | பிரதி மாதம் 5–ம் தேதிக்குள் தொண்டுநிறுவனம் உறைவிடத்தில் தங்க வரும் நோயாளிகளின் பாதுகாவலர்களின் பட்டியலை நகராட்சிக்கு அளிக்கும்பட்சத்தில் நகராட்சியானது பதிவேடுகளை ஆய்வு செய்து அதற்கான செலவினத்தை வங்கி வரைவோலையாக மதுரை மாவட்ட ஹரிஜன சேவாசங்கம் (விவேகானந்தா மாணவர் இல்லம், கம்பம், தேனிமாவட்டம்) என்ற பெயரில் வழங்கவேண்டும். |
| 8. | நோயாளிகளின் பாதுகாவலர்கள் உறைவிடமானது 24 மணிநேரமும் வாரத்தின் 7 நாட்களும் (24x7) பயனாளிகள் வந்துசெல்வதற்கு ஏதுவாக திறந்து வைக்கப்படவேண்டும். |
| 9. | ஆண்களுக்கும், பெண்களுக்கும் தனித்தனியாக தலா 25 நபர்கள் தங்குவதற்கு ஏதுவாக அமைக்கப்பட்டுள்ளது. இதில் ஏதேனும் மாற்றங்கள் செய்ய விரும்பினால் நகராட்சியின் முன்அனுமதியோடு தொண்டு நிறுவனம் செயல்படவேண்டும். |
| 10. | வணிக நோக்கத்தோடு மேற்படி கட்டிடம் பயன்படுத்தக்கூடாது. ஏதேனும் சூழ்நிலையில் தவறாக பயன்படுத்தப்படுவது கண்டறியப்பட்டால் முன்அறிவிப்பு ஏதுமின்றி ஒப்பந்தம் ரத்து செய்யப்படும். |
| 11. | தொண்டு நிறுவனமானது நோயாளிகளின் பாதுகாவலர் தவிர பிற நபர்களை பிற நபர்களை தங்குவதற்கு அனுமதிக்ககூடாது. |
| 12. | தொண்டு நோக்கத்தோடு செயல்படவேண்டியிருப்பதால் பயனாளிகளை கட்டாயப்படுத்தி உறைவிடத்தில் தங்கவைக்க கூடாது |
| 13. | சட்ட விரோதமான செயல்கள் எதுவும் நடைபெற அனுமதிக்கக்கூடாது. ஏதேனும் சட்ட பிரச்சினைகள் ஏற்பட்டால் தொண்டுநிறுவனமே பொறுபேற்க வேண்டும். |
| 14. | ஏற்கனவே மன்றத்தில் அனுமதித்துள்ளபடி நாள் ஒன்றுக்கு, நபர் ஒன்றுக்கு ரூ. 20/– பெற்றுக்கொண்டு தங்க அனுமதிக்கலாம். மேற்கண்ட தொகை ரூ. 20/– அய் செலுத்த இயலாத சூழ்நிலையில் உள்ள நோயாளிகளின் பாதுகாவலர்களை இலவசமாக தங்க அனுமதிக்கவேண்டும். அதற்கு தனியாக பதிவேடு பராமரிக்கப்படவேண்டும். |
| 15. | உறைவிடத்தில் ஏதேனும் களவாடப்பட்டிருந்தாலோ அல்லது எந்த வகையிலும் சொத்துக்கு சேதம் விளைவிக்கப்பட்டிருந்தாலோ அதற்கு பராமரிக்கும் நிறுவனமே பொறுப்பாகும். |
| 16. | உறைவிட காப்பக மேலாண்மை குழு காப்பகத்தின் நிகழ்வுகளை தினசரி கவனிக்கவேண்டும். மேலும், மேலாண்மை குழு கலந்தாய்வு கூட்டங்கள் மாதத்திற்கு இருமுறை கூட்டப்பட்டு நிகழ்வுகளின் கூட்ட நடவடிக்கைகள் தயார் செய்யப்படவேண்டும். |
| 17. | காப்பகத்தின் வரவு செலவினங்களை பராமரிப்பதற்கு தனியான வங்கி கணக்கு ஆணையர் மற்றும் செயலர், ஹரிஜன சேவா சங்கம், விவேகானந்தா மாணவர் இல்லம் , கம்பம் ஆகிய இருவரது பெயரிலும் தொண்டு நிறுவனத்தின் கூட்டு கணக்காக துவங்கப்படவேண்டும். இது சம்மந்தமாக ஒவ்வொரு ஆண்டும் தணிக்கைக்கு உட்படுத்தப்பட்டு நகராட்சிக்கு தெரிவிக்கவேண்டும். |
| 18. | நகராட்சி காப்பகத்தின் செயல்பாடுகளை எந்தநேரத்திலும் ஆய்வு செய்யும் உரிமை உண்டு. |
| 19. | ஒவ்வொரு காலாண்டிற்கும் நகராட்சி மற்றும் தொண்டுநிறுவனம் இரண்டிற்கும் பணிகள் பற்றிய முன்னேற்ற அறிக்கை கலந்தாய்வு செய்யப்படவேண்டும். |
| 20. | ஒப்பந்தத்தில் குறிப்பிட்டுள்ள விதிமுறைகளை தவறும்பட்சத்தில் மூன்று மாத காலத்திற்குள் அறிவிப்பு வழங்கி ஒப்பந்தம் ரத்து செய்யப்படும். |
| 21. | முதலாவது ஆண்டில் தொண்டு நிறுவனத்தின் நடவடிக்கைகள் கண்காணிக்கப்பட்டு திருப்திகரமாக இருக்கும்பட்சத்தில் மட்டுமே தொடர்ந்து புதுப்பித்தல் செய்யப்படும். |

| | |
|---|---|
| 22. | நிதிநிலைமை காரணமாகவோ, வேறு எந்த சூழ்நிலை காரணமாக மேற்படி காப்பகத்தை தொண்டுநிறுவனம் மூலம் இயக்க முடியாத நிலை ஏற்படுமேயானால் மூன்று மாதத்திற்கு முன்பாகவே நகராட்சிக்கு தெரிவிக்கப்படவேண்டும். நகராட்சி மூலம் புதிய தொண்டு நிறுவனம் நியமனம் செய்யப்படும். |
| 23. | இந்த புரிந்துணர்வு ஒப்பந்தமானது 14.11.2018 முதல் 14.11.2019 வரை ஏற்புடையதாகும். ஒவ்வொரு ஆண்டு முடிவிலும் தொண்டு நிறுவனத்தின் செயல்பாடுகளை பொறுத்து நீட்டிப்பு செய்யப்படும். அல்லது தொண்டு நிறுவனத்தின் செயல்பாடுகள் தேசிய நகர்புற வாழ்வாதார திட்டத்தின் வழிமுறைகளுக்கு புறம்பானதாக இருப்பின் எவ்வித முன்னறிவிப்புமின்றி ரத்து செய்யப்படும். |
| 24. | நோயாளிகளுடன் உடன் தங்குபவர் உறைவிடத்தில் தங்க வரும்போது அரசு மருத்துவமனை அலுவலகத்திலிருந்து நோயாளியின் பெயர் மற்றும் நோயாளியின் பாதுகாவலரின் பெயர் அடங்கிய முறையான அனுமதி சீட்டினை பெற்று தங்க அனுமதிக்கவேண்டும். |

**அலுவலக்குறிப்பு..**

1) கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்ட நடவடிக்கை விபரத்தினை மன்றம் பதிவுசெய்யலாம்.
2) மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி மன்ற அனுமதியை எதிர்நோக்கி முன்அனுமதி பெற்று கம்பம் அரசு மருத்துவமனையில் உள்நோயாளிகளின் பாதுகாவலர்கள் மருத்துவமனையில் தங்குமிடம் கட்டப்பட்டுள்ளதை மதுரை மாவட்ட ஹரிஜன சேவக சங்கம், கம்பம் அறக்கட்டளை நிறுவனம் மூலம் மேற்பார்வை மற்றும் பராமரித்தல் பணி மேற்கொள்ள உத்திரவு வழங்குவதற்கும் மன்றம் அனுமதிக்கலாம்.

**7.** இந்நகர்மன்றத் தீர்மானம் எண். 1620, நாள்.12.10.2018 இல் இந்நகராட்சி பொது சுகாதார பிரிவில் திடக்கழிவு மேலாண்மை பணிகளுக்கு பயன்படுத்தப்பட்டு பழுதடைந்து, மீண்டும் பயன்படுத்த முடியாத நிலையில் இருக்கும் தள்ளுவண்டிகள், டம்பர் பிளேசர் கொள்கலன்கள், பயன்படுத்தி பழுதடைந்த டயர்கள் மற்றும் வாகனங்கள் மாரமத்து பணிகள் செய்யப்பட்டபோது கழற்றப்பட்ட உதிரிபாகங்கள் ஆகிய பொருட்களை கழிவு செய்திட அனுமதியளிக்கப்பட்டுள்ளதன்படி **27.11.2018** அன்று ஆணையர் மற்றும் ஆய்வுக்குழு முன்னிலையில் நடைபெற்ற மறு பொது ஏலத்தில், ஏல அறிவிப்பின்படி முன்வைப்பு தொகை பெறப்பட்டு கீழ்கண்டவாறு ஒவ்வொரு இனத்திற்கும் ஏலம் நடத்தப்பட்டதில் வரப்பெற்ற ஏலக்கேள்விகள் மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | ஏல பொருட்கள் விபரம் | ஏலதாரர் பெயர் மற்றும் முகவரி | கிலோ ஒன்றிற்கு ரூ. |
|---|---|---|---|
| 1. | டம்பர் பிளேசர் கொள்கலன்கள் | 1)ஸ்ரீ ஜெயலெட்சுமி டிரேடர்ஸ்,<br>444, குளாலர் கல்யாண மஹால்,கம்பம் | ரூ. 19.00 |
| | | 2) திரு. எஸ். வாஹித்,<br>கம்பம்மெட்டு காலனி, கம்பம் | ரூ. 19.50 |
| | | 3) திரு. ஐ. சா்புதீன்,<br>155எ, கம்பம் மெட்டு காலனி, கம்பம் | கலந்துகொள்ளவில்லை |
| | | 4) திரு. ஜி. பிச்சைமணி,<br>6–வது வார்டு , கம்பம் | ஏலம் கோரவில்லை |
| 2. | தள்ளுவண்டிகள் | 1)ஸ்ரீ ஜெயலெட்சுமி டிரேடர்ஸ்,<br>444, குளாலர் கல்யாண மஹால்,கம்பம் | ரூ. 20.50 |
| | | 2) திரு. எஸ். வாஹித்,<br>கம்பம்மெட்டு காலனி, கம்பம் | ரூ. 21.00 |
| | | 3) திரு. ஐ. சா்புதீன்,<br>155எ, கம்பம் மெட்டு காலனி, கம்பம் | கலந்துகொள்ளவில்லை |
| | | 4) திரு. ஜி. பிச்சைமணி,<br>6–வது வார்டு , கம்பம் | ஏலம் கோரவில்லை |

| | | | |
|---|---|---|---|
| 3. | உதிரி பாகங்கள் | 1)ஸ்ரீ ஜெயலெட்சுமி டிரேடர்ஸ்,<br>444, குளாலர் கல்யாண மஹால்,<br>கம்பம் | ரூ. 20.00 |
| | | 2) திரு. எஸ். வாஹித்,<br>கம்பம்மெட்டு காலனி, கம்பம் | ரூ. 20.50 |
| | | 3) திரு. ஐ. சா்புதீன்,<br>155எ, கம்பம் மெட்டு காலனி, கம்பம் | கலந்துகொள்ளவில்லை |
| | | 4) திரு. ஜி. பிச்சைமணி,<br>6–வது வார்டு , கம்பம் | ஏலம் கோரவில்லை |
| 4. | பழுதடைந்த டயர்கள் | 1)ஸ்ரீ ஜெயலெட்சுமி டிரேடர்ஸ்,<br>444, குளாலர் கல்யாண மஹால்,<br>கம்பம் | ஏலம் கோரவில்லை |
| | | 2) திரு. எஸ். வாஹித்,<br>கம்பம்மெட்டு காலனி, கம்பம் | ரூ. 2.50 |
| | | 3) திரு. ஐ. சா்புதீன்,<br>155எ, கம்பம் மெட்டு காலனி, கம்பம் | கலந்துகொள்ளவில்லை |
| | | 4) திரு. ஜி. பிச்சைமணி,<br>6–வது வார்டு , கம்பம் | ரூ. 3.00 |

**அலுவலகக் குறிப்பு : –** 1) வரிசை எண். 1–ல் உள்ள இனத்திற்கு வரப்பெற்ற ஏலக்கேள்விகளில் உயர்ந்தபட்ச ஏலக்கேள்வியாக ரூ. 19.50/– க்கு கேட்டுள்ள திரு. எஸ். வாஹித், கம்பம் மெட்டுக் காலனி, கம்பம் என்பவரது ஏலக்கேள்வியினை மன்றம் அனுமதிக்கலாம்.

2) வரிசை எண். 2–ல் உள்ள இனத்திற்கு வரப்பெற்ற ஏலக்கேள்விகளில் உயர்ந்தபட்ச ஏலக்கேள்வியாக ரூ. 21.00/– க்கு கேட்டுள்ள திரு. எஸ். வாஹித், கம்பம் மெட்டுக் காலனி, கம்பம் என்பவரது ஏலக்கேள்வியினை மன்றம் அனுமதிக்கலாம்.

3) வரிசை எண். 3–ல் உள்ள இனத்திற்கு வரப்பெற்ற ஏலக்கேள்விகளில் உயர்ந்தபட்ச ஏலக்கேள்வியாக ரூ. 20.50/– க்கு கேட்டுள்ள திரு. ஸ். வாஹித், கம்பம் மெட்டுக் காலனி, கம்பம் என்பவரது ஏலக்கேள்வியினை மன்றம் அனுமதிக்கலாம்.

4) வரிசை எண். 4–ல் உள்ள இனத்திற்கு வரப்பெற்ற ஏலக்கேள்விகளில் உயர்ந்தபட்ச ஏலக்கேள்வியாக ரூ. 3.00/– க்கு கேட்டுள்ள திரு. ஜி. பிச்சைமணி, கம்பம் என்பவரது ஏலக்கேள்வியினை மன்றம் அனுமதிக்கலாம்.

5) மேற்கண்ட பணியின் அவசர அவசியம் கருதி மன்ற அனுமதியை எதிர்நோக்கி முன்அனுமதி பெற்று பணிகள் மேற்கொண்டதற்கும் மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.4386/2018/இ1)

**8.** இந்நகராட்சி பொறியியல் பிரிவில் உள்ள குடிநீர் வாகனம் டிராக்டர் டி.சி.யு. **9465** மற்றும் டிரெய்லர் டி.சி.யு. **9769** வாவாகனத்திக்கான தகுதி சான்றிதழ் **17.12.2018** உடன் முடிவடைவதால் மராமத்து பணிகள் மற்றும் தகுதி சான்று பெறுவதற்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ. **25,000/–**க்கு பணிகள் மேற்கொள்ளவும், மேற்படி பணிக்கு வரப்பெற்ற விலைப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | பணியின் விபரம் | விலைப்புள்ளிதாரா் பெயர் | தொகை |
|---|---|---|---|
| 1 | இந்நகராட்சி குடிநீர் டிராக்டர் டி.சி.யு. **9465** வாகனம் மற்றும் டிசியு. **9769** வாகனத்திற்கு மராமத்து பணிகள் செய்தல் மற்றும் தகுதி சான்று பெறுதல் | **1)**பரணி டிராக்டர் ஒர்க்ஸ்,<br>**20**, கே.கே. பட்டி ரோடு, கம்பம் | ரூ. **19,800/–** |
| | | **2)**ஸ்ரீ லெட்சுமி டிராக்டர் அன்டு லேத் வெல்டிங் ஒர்க்ஸ்,<br>கே.கே.பட்டி ரோடு, கம்பம் | ரூ. **23,800/–** |
| | | **3)**ஸ்ரீ கிருஷ்ணா மோட்டார் ஒர்க்ஸ், மெயின்ரோடு, கம்பம் | ரூ. **25,100/.** |

| | |
|---|---|
| | **அலுவலகக்குறிப்பு..** <br> 1)வரப்பெற்ற விலைப்புள்ளிகளில் குறைவாக விலைப்புள்ளி கொடுத்துள்ள பரணி டிராக்டர் ஒர்க்ஸ், கம்பம் விலைப்புள்ளியினை மன்றம் அனுமதிக்கலாம். <br> 2)மேற்கண்ட பணியின் அவசர அவசியம் கருதி மன்ற அனுமதியை எதிர்நோக்கி ஆணையாளர் / தனி அலுவலர் அவர்களின் முன்அனுமதி பெற்று விலைப்புள்ளி கோரியதற்கும் மன்றம் அனுமதிக்கலாம். |
| **9.** | இந்நகராட்சியின் மக்கள் தொகை 69183 ஆகும். 10,000 மக்கள் தொகைக்கு 1 ஏக்கர் வீதம் 7 ஏக்கர் நிலம் உரக்கிடங்கிற்கு தேவைப்படுகிறது. ஆனால் 4.5 ஏக்கரில் உரக்கிடங்கு உள்ளது. இதில் தினமும் 18 மெ.டன் குப்பை கழிவுகள் உரக்கிடங்கில் சேர்க்கப்பட்டு வரப்படுகிறது. தற்போது தீபாவளி பண்டிகையொட்டி அதிகப்படியான குப்பைகள் உரகிடங்கில் சேர்ந்ததாலும், வடகிழக்கு பருவமழையின் காரணமாக தொடர்ந்து மழை பெய்து வருவதாலும் உரக்கிடங்கு பகுதியில் நகராட்சி வாகனங்கள் உள்ளே சென்று வர இயலாத நிலை சூழ்நிலையும், வாகனங்கள் மாட்டிக்கொள்ளும் சூழ்நிலை உள்ளதால், கிட்டாட்சி மற்றும் ஜேசிபி வாகனம் மூலம் குப்பைகழிவுகளை அகற்றி நகராட்சி வாகனங்களுக்கு பாதை வசதி எற்படுத்திக் கொடுத்தால் மட்டுமே உரக்கிடங்கில் குப்பை கழிவுகளை கொட்ட முடியும். ஏற்கனவே இந்நகர்மன்ற தீர்மான எண். 1413, நாள். 13.02.2018–இன் படி, இந்நகராட்சிக்கு சொந்தமான கம்பம் – கூடலூரா் மெயின் ரோட்டில் அமைந்துள்ள புதிய உரக்கிடங்கில் தேவைப்படும் நேரங்களில் ஜேசிபி மற்றும் கிட்டாட்சி (HITACHI) மூலம் குப்பை கழிவுகளை ஒதுக்கி சமப்படுத்தும் பணிகளை மேற்கொள்வதற்கு, ஒரு மாதத்தில் வாரத்திற்கு ஒரு நாள் விதம், ஒரு மாதத்திற்கு நான்கு நாட்கள் பணிகளை மேற்கொள்வதற்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ. 30,000/– க்கு (ரூபாய் முப்பதாயிரம் மட்டும்) மன்றத்தின் அனுமதி பெறப்பட்டு பணி செய்து வரப்பபட்டது. இது போதுமானதாக இல்லாத காணரத்தால், மேற்கண்ட சூழ்நிலையை கருத்திற்கொண்டு நவம்பர் மற்றும் டிசம்பர் மாதங்களுக்கு ஜேசிபி மற்றும் கிட்டாட்சி (HITACHI) மூலம் குப்பை கழிவுகளை ஒதுக்கி சமப்படுத்தும் பணிகளை மேற்கொள்வதற்கு, ஏற்கனவே மேற்படி பணியினை செய்துவரும் Task Earth Movers நிறுவனத்தின் மூலம் நவம்பர் 2018 மற்றும் டிசம்பர் 2018 மாதத்திற்கு மட்டும் கூடுதலாக மாதம் ஒன்றுக்கு ரூ. 50,000/– வீதம் கூடுதல் செலவினம் மேற்கொள்வதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. |
| | **அலுவலகக்குறிப்பு..** மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண். 482/2018/எச்1) |
| **10.** | அரசாணை எண். 166, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு துறை நாள். 23.11.2016–இன் படி கம்பம் நகராட்சி பகுதியில் உள்ள அரசு மற்றும் நகராட்சி பள்ளிகளில் உள்ள கழிப்பிடங்களை பராமரிக்க ஆகும் செலவினங்களை கல்வி நிதியிலிருந்து மேற்கொள்ள அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. சென்னை நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் ந.க.எண். 32050/2016/ஜே2, 26.10.2017–ஆம் தேதிய செயல்முறையில் மேற்படி பணியினை வெளிக்கொணர்வு முறையில் (Out sourcing) மாவட்ட ஆட்சித்தலைவர் நிர்ணயிக்கும் தினக்கூலி அடிப்படையில் உரிய பணியாளர்களை நியமித்தும், அப்பணியாளர்களுக்கு EPF. ESI தொகை மற்றும் இதர தொகைகள் வழங்கி பணிகள் மேற்கொள்ள அறிவுறுத்தப்பட்டுள்ளது. இதன்படி கடந்த வழங்கிய ஒப்பந்தம் எதிர்வரும் 31.12.2018 உடன் முடிவடைகிறது. இப்பணி ஒவ்வொரு ஆண்டும் தொடர்ந்து செயல்படுத்த வேண்டிய பணியாதலால் 01.01.2019 முதல் ஓராண்டிற்கு மேற்படி நடைமுறைகளின்படி பணியாளர்களை நியமித்து செயல்படுத்த அனுமதியும், இதற்கான ஓராண்டு செலவினத் தொகை ரூ. 15.79 இலட்சத்திற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. |
| | அலுவலகக்குறிப்பு.. 1) மன்றம் அனுமதிக்கலாம். <br> 2) உரிய காலத்தில் ஒப்பந்தப்புள்ளி கோரி ஒப்படைக்க நிர்வாக காரணங்களினால் காலதாமதம் ஏற்பட்டால், பணியின் அவசியம் கருதி புதிய ஒப்பந்தப்புள்ளியை முடிவு செய்யும் காலம் அல்லது 3 மாத காலம் இதில் எது முன்னதோ அதுவரை ஏற்கனவே இப்பணியினை செயல்படுத்தி வரும் நிறுவனமான M/s Relyon Facility Service Limited, Chennai நிறுவனத்திற்கு வழங்க அனுமதியும், அதற்காகும் கூடுதல் செலவினத்தினை வழங்கவும் மன்றம் அனுமதிக்கலாம். <br> (ந.க.எண். 3398/2016/எச்1) |

**11.** இந்நகராட்சியின் மூலம் வார்டு எண். **12**, தாத்தப்பன்குளம் **7**–வது சந்து கடை எண். **1** அய் மாத வாடகை அடிப்படையில் குத்தகைக்கு விடும் உரிமத்திற்கான பொது ஏலம் / ஒப்பந்தப்புள்ளி **11.10.2018** அன்று கோரப்பட்டது. இதில் பொது ஏலம் கோர யாரும் முன்வரவில்லை. கீழ்கண்ட ஒரே ஒரு ஒப்பந்தப்புள்ளி மட்டும் வரப்பெற்றது.

| வ.எண் | பெயர் | மாத வாடகை | |
|---|---|---|---|
| 1) | திருமதி. வி. வளர்மதி, கம்பம் | ரூ. **1610/–** | உயர்ந்த பட்ச மாத வாடகை |

மேற்படி ஒப்பந்தப்புள்ளியில் திருமதி. வி. வளர்மதி, கம்பம் அவர்கள் உயர்ந்தபட்ச ஒப்பந்தப்புள்ளி மாத வாடகையாக ரூ. **1610/–** ற்கு கோரியுள்ளார். அன்னாரின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்பது குறித்து மன்றத்தின் பரிசீலனைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு..** **1)**தாத்தப்பன் குளம் 7வது சந்து கடை எண். 1 ஆனது 30.06.2018 உடன் வாடகைதாரர் உரிமம் இரத்து செய்து ஏலம் விடப்பட்டதாகும். தொடர்ந்து 2 முறை ஏலம் கோரியும் யாரும் கலந்து கொள்ள முன்வராத நிலையில் 3–வது முறையாக ஒரே ஒரு ஒப்பந்தப்புள்ளி மட்டும் வரப்பெற்றுள்ளது. நிதியிழப்பினை தவிர்க்கும் வகையில் கடந்த ஏலத்தொகையினைவிட கூடுதலாக மாத வாடகை ரூ. 1610/– க்கு கோரிய திருமதி. வி. வளர்மதி, கம்பம் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் அனுமதிக்கலாம்.

2) அவசர அவசியம் கருதி மன்ற அனுமதியினை எதிர்நோக்கி முன்அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண். 3207/2017/பி2)

**12.** இந்நகராட்சிக்கு சொந்தமான புதிய பேருந்து நிலையத்தில் தட்டில் பூ வைத்து விற்கும் உரிமத்திற்கான பொது ஏலம் / ஒப்பந்தப்புள்ளி **11.10.2018** அன்று கோரப்பட்டது. இதில் பொது ஏலம் கோர யாரும் முன்வரவில்லை. கீழ்கண்ட ஒரே ஒரு ஒப்பந்தப்புள்ளி மட்டும் வரப்பெற்றது.

| வ.எண் | பெயர் | ஒப்பந்தப்புள்ளி தொகை |
|---|---|---|
| 1) | திரு. எஸ். பிரபாகரன், கம்பம் | ரூ. **26,000/–** |

மேற்படி ஒப்பந்தப்புள்ளியில் திரு. எஸ். பிரபாகரன், கம்பம் அவர்கள் உயர்ந்தபட்ச ஒப்பந்தப்புள்ளி தொகையாக ரூ. **26,000/–** ற்கு கோரியுள்ளார். அன்னாரின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்பது குறித்து மன்றத்தின் பரிசீலனைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு..** **1)** மேற்படி இனமானது தொடர்ந்து **20.02.2018, 14.03.2018, 27.03.2018, 25.04.2018, 04.05.2018, 13.06.2018, 23.08.2018, 26.09.2018** ஆகிய தேதிகளில் **8** முறை ஏலம் கோரியும் முன்பணம் செலுத்தி யாரும் ஏலம் கோர முன்வரவில்லை. **9**–வது முறையாக வரப்பெற்ற ஒரே ஒரு ஒப்பந்தப்புள்ளியானது கடந்தாண்டு மற்றும் மூன்றாண்டு சராசரித் தொகையினை விட கூடுதலாக கேட்கப்பட்டுள்ளதால் நிதியிழப்பினை தவிர்க்கும் வகையில் திரு. எஸ். பிரபாகரன் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் அனுமதிக்கலாம்.

2) அவசர அவசியம் கருதி மன்ற அனுமதியினை எதிர்நோக்கி முன்அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண். 3207/2017/பி2)

**13.** கம்பம் நகராட்சி பகுதியில் டெங்கு காய்ச்சல் தடுப்புப் பணியினை மேற்கொள்ளும் பொருட்டு வீடு வீடாக சென்ற புகைமருந்து அடிக்கும் சிறிய புகை தெளிப்பான் 10 எண்ணம் பழுதடைந்துள்ளது. தற்போது மழைக்காலம் தொடங்கி டெங்கு காய்ச்சல் அதிகமாக பரவி வருவதால் வீடுவீடாக சென்று புகை மருந்து அடிக்கும் பணி துவங்க இருப்பதால் மேற்காணும் 10 எண்ணம் சிறிய புகை தெளிப்பான்களை பழுது நீக்கம் செய்வதற்கு 09.10.2018– ஆம் நாள் வரப்பெற்ற கீழ்க்கண்ட மூன்று விலைப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | விலைப்புள்ளிதாரர் பெயர் மற்றும் முகவரி | விலை விகிதம் (இயந்திரம் ஒன்றுக்கு ) ரூ. |
|---|---|---|
| 1. | உரிமையாளர்,<br>A.R. Sprayers,<br>Near Aravinth Eye Hospital, Cumbum | 4,900/– |
| 2. | உரிமையாளர்,<br>Hy Ranger Service, Kumuly | 5,500/– |
| 3. | உரிமையாளர்,<br>Kumar Enterprises,<br>Sprayer Service Centre, Cumbum. | 5,700/– |

**அலுவலகக்குறிப்பு..** 1) வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள A.R. Sprayers, Near Aravinth Eye Hospital, Cumbum விலைப்புள்ளியை மன்றம் அனுமதிக்கலாம்.

2) அவசர அவசியம் கருதி, தனி அதிகாரியின் முன் அனுமதி பெற்று வேலை உத்திரவு வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண். 4268/2018/எச்1)

**14.** இந்நகராட்சி பகுதியில் ஒரு முறையே பயன்படுத்தக்கூடிய தடை செய்யப்பட்ட பிளாஸ்டிக் பைகள் மற்றும் பிளாஸ்டிக் கப்புகள் பயன்படுத்திய வணிக வளாகங்கள் மற்றும் மொத்த பிளாஸ்டிக் பைகள் விற்பனையாளர்களிடமிருந்து சுமார் 1½ டன் பிளாஸ்டிக் பைகள் பறிமுதல் செய்து நகராட்சி அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ளது. மேலும், 01.01.2019 முதல் பிளாஸ்டிக் பைகள் பயன்படுத்துவதையும், விற்பனை செய்வதும் தமிழ்நாடு அரசால் தடைவிதிக்கப்பட்டுள்ளது. எனவே, மேற்படி பறிமுதல் செய்யப்பட்ட 1½ டன் பிளாஸ்டிக் பைகள் மற்றும் பிளாஸ்டிக் கப்புகளை பெற்றுக்கொள்ள விருப்பமுள்ள நபர்களிடமிருந்து விலைப்புள்ளி பெற்று அதிக விலைப்புள்ளி கொடுக்கும் நபர்களுக்கு விற்பனை செய்வதற்கும், அவ்வாறு பெறப்படும் பிளாஸ்டிக் பொருட்களை மறுசுழற்சி பயன்பாட்டிற்கு மட்டுமே பயன்படுத்தப்படும் என்ற உறுதிமொழி பெற்றுக்கொண்டு விலைப்புள்ளி கோருவதற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு..** 1) மன்றம் அனுமதிக்கலாம்.

2) தனி அதிகாரியின் முன் அனுமதி பெற்று விலைப்புள்ளி கோருவதை மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண். 832/2018/எச்1)

15. இந்நகராட்சிக்கு சொந்தமான மினி லாரி வாகனம் TN. 60 Y 1959 - க்கு கியர் பாக்ஸ் மற்றும் கிளட்ச் பழுது பணியினை செய்வதற்கு 08.11.2018ம் நாள் வரப்பெற்ற கீழ்க்கண்ட இரண்டு விலைப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும், அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | விலைப்புள்ளிதாரா் பெயா் மற்றும் முகவரி | விலை விகிதம் ரூ |
|---|---|---|
| 1. | திரு. பி. முருகன்,<br>ஸ்ரீ முருகன் ஆட்டோ எலெக்ட்ரிக்கல்ஸ்,<br>நகராட்சி எதிர்புறம், கம்பம். | 34,900/– |
| 2. | திரு. எஸ். முருகன்,<br>ஸ்ரீ சாய்ராம் ஸ்பிரே பெயிண்டிங்க ஒர்க்ஸ்,<br>CMS நகா், அரசு மருத்துவமனை எதிர்புறம், கம்பம். | 38,500/– |

**அலுவலகக்குறிப்பு..** வரப்பெற்ற இரண்டு விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்.ள்ளி கொடுத்துள்ள திரு. பி. முருகன், ஸ்ரீ முருகன் ஆட்டோ எலெக்ட்ரிக்கல்ஸ், கம்பத்தின் விலைப்புள்ளியை மன்றம் அனுமதிக்கலாம். அவசர, அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று வேலை உத்தரவு வழங்கியதை மன்றம் அங்கீகரிக்கலாம். (ந.க.எண். 1277/2018/எச்1)

16. இந்நகராட்சி பொது சுகாதார பிரிவில் முதிர்ந்த கொசுக்களை அழிக்க பயன்படும் பைரீத்திரம் மருந்தும் நல்ல தண்ணீரில் வளரக்கூடிய டெங்கு, சிக்குன்குனியா போன்ற நோய்களை பரப்பும் ஏடிஸ் வகை கொசுக்களையும், மலேரியா நோயை பரப்பக்கூடிய அனோபிரிஸ் வகை கொசுக்களையும் உற்பத்தியாகும் இடங்களில் தெளித்து அழிக்கக்கூடிய அபேட் (Temephas) மருந்து இருப்பில் குறைவாக இருப்பதால் அரச அங்கீகரித்த நிறுவனத்திடம் கொள்முதல் செய்தற்கும், அதற்காகும் உத்தேச செலவுத் தொகை ரூ. 3,00,000/–க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு..** 1) மன்றம் அனுமதிக்கலாம்
2) மன்ற ஒப்புதலை எதிர்நோக்கி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று விநியோக உத்தரவு வழங்கியதை மன்றம் அங்கீகரிக்கலாம். (ந.க.எண். 7158/2018/எச்1)

17. கம்பம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண். 18–இல் மஞ்சனக்காரத் தெரு, கதவு எண். 15/18 கொண்ட கட்டிடத்தின் உரிமையாளா் திரு.பி. நிஷார் அகமது என்பவா் நகராட்சியின் அனுமதி ஏதுமின்றி கட்டிடத்தின் முதல் தளத்தில் மல்லிகை அச்சகம் என்ற பெயரில் 1/2 குதிரை திறன் கொண்ட மின் மோட்டார் மூலம் மூன்று இயந்திரங்களை இயக்கி வருவதாகவும், மேற்படி இயந்திரங்களை நிறுவியதால் திரு. மு. ஜெகநாதன் என்பவரின் கட்டிடத்திற்கும், குடியிருப்போருக்கும் மிகுந்த பாதிப்பு உண்டாகி வருவாதாக தெரிவித்து மேற்படி இயந்திரம் இயக்குவதை நிறுத்த உரிய உத்தரவு இடக்கோரி திரு. மு. ஜெகநாதன் என்பவா் அரசு செயா், நகராட்சி நிர்வாக ஆணையா், நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநா், மாவட்ட ஆட்சியா், காவல்துறை கண்காணிப்பாளா், ஆணையாளா், காவல் ஆய்வாளா் ஆகியோரை அரசு பிரதிவாதியாக சேர்த்து சென்னை உயா்நீதிமன்ற மதுரை கிளையில் டபுள்யூ.பி(எம்.டி) எண். 18445/2018 எண்ணில் வழக்கு தொடா்ந்துள்ளாா். மேற்படி வழக்கு தொடா்பாக நகராட்சி சாா்பாக திரு. கே. ஹேமகாா்த்திகேயன் ஆஜராகி வழக்கை நடத்திடவும் அதற்கான செலவினத் தொகை ரூ. 10,000/– ஐ வழங்கவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு..** மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண். 3097/2016/எச்1)

| 18. | இந்நகராட்சி பகுதியில் ஒரு முறையே பயன்படுத்தக்கூடிய தடை செய்யப்பட்ட பிளாஸ்டிக் பைகள் மற்றும் பிளாஸ்டிக் கப்புகள் பயன்படுத்திய வணிக வளாகங்கள் மற்றும் மொத்த பிளாஸ்டிக் பைகள் விற்பனையாளர்களிடமிருந்து சுமார் 1½ டன் பிளாஸ்டிக் பைகள் பறிமுதல் செய்து நகராட்சி அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ளது. இதனை பெற்றுக் கொள்ள விரும்பும் வியாபாரிகள் கிலோ ஒன்றுக்கு செலுத்துவதற்கான தொகையை நிர்ணயம் செய்ய விலைப்புள்ளி கோரப்பட்டதில் 26.11.2018ம் நாள் வரப்பெற்ற கீழ்க்கண்ட இரண்டு விலைப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது. |
|---|---|

| வ.எண் | விலைப்புள்ளிதாரர் பெயர் மற்றும் முகவரி | கிலோ ஒன்றுக்கு விலை ரூ. | | |
|---|---|---|---|---|
| | | PP | HM | PET |
| 1. | தீன் ஏஜென்சீஸ்,<br>719/11, பழைய செக்போஸ்ட் பின்புறம்,<br>கம்பம் மெட்டு ரோடு, கம்பம் | 16/– | 6/– | 7/– |
| 2, | ஏசியன் பாலிமர்ஸ்,<br>2சி/11, கம்பம் மெட்டு ரோடு,<br>கம்பம் | 20/– | 8/– | 12/– |

அலுவலக்குறிப்பு..

1) வரப்பெற்ற இரண்டு விலைப்புள்ளிகளில் அதிக விலைப்புள்ளி கொடுத்துள்ள உரிமையாளர் ஏசியன் பாலிமர்ஸ், கம்பம் அவர்கள் கொடுத்துள்ள தொகையை விலையாக நிர்ணயம் செய்யலாம்.

2) தனி அதிகாரியின் முன் அனுமதி பெற்று வேலை உத்திரவு வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண். 832/2018/எச்1)

ஒப்பம்/– திரு ந.சங்கரன்,
ஆணையாளர் மற்றும் தனி.அதிகாரி,
கம்பம் நகராட்சி.

நாள். 30.11. 2018
இடம். கம்பம்